ஊழல் பிரச்சினையை ஊமையாக்குவதேன்?

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (5–4–50) வெளியூர் (6–4–50) [இதழ் 215

இல்லை ஊழல் எனில், ஒளிவு—மறைவு ஏன்?

—————(0)—————

மந்திரிகள் உண்மையை விளக்கி உயர்வைக் காட்டலாமே!

—————(0)—————

மங்கும் பிரச்சினை 'பிரகாசம்' அடைகிறது!

சென்னை, ஏப். 4—

"மாகாண சட்டசபைக் கட்சி ஒரு பிரச்சினையைப் பற்றி முடிவு செய்வதற்கு முன், அப் பிரச்சினை பற்றிய ஏகபோக அதிகாரம் தனக்கே உரியதென்று பாராளு மன்றக் கட்சி கருதுவது சட்ட பூர்வமானதுமாகாது; நீதியுமாகாது; நேர்மையானதுமாகாது"

என்று தோழர் டி. பிரகாசம் டில்லி காங்கிரஸ் பாராளு மன்ற சபைத் தலைவருக்குத் தந்தியடித்திருக்கிறார்.

ஆகையால் தன் மீதும், மற்ற சகாக்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகக் கூறி மிரட்டுவது நல்லதென்று தோழர் பிரகாசம் அறிவிக்கிறார்.

மந்திரிமார் மீதுள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சென்னை சட்டசபையில் விவாதிக்கப்பட வேண்டுமென்று தோழர் பிரகாசம் [illegible]

[illegible] ...ன் மீறாது ...ட்கா ரும்படியும் கேட்டுக் கொண்ட காங்கிரஸ் காரியதரிசி தோழர் சங்கர்ராவ் தேவ் அவர்களுக்குத் தான், தோழர் பிரகாசம் இவ்வாறு பதிலளித்திருக்கிறார்.

தோழர் பிரகாசம் பழுத்த காங்கிரஸ்காரர். இன்று காங்கிரசிலுள்ளவர்களில் மிகவும் அதிக வயதானவர் அவர்தான். மேலும் சென்னை சர்க்காரின் முதலமைச்சராகவும் இருந்திருக்கிறார். அவர் கொண்டு வந்தக் குற்றச்சாட்டு, சில மந்திரிகள் ஊழல் நிறைந்தவர்களாக இருந்தார்களென்பது. குற்றம் சாட்டப்பட்ட மந்திரிகள், உடனே ராஜினாமாச் செய்திருக்கவேண்டும். தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் தக்கவாறு விசாரித்து தங்களுடைய பெயருக்குக் களங்கம் ஏற்படாமல் காக்க வேண்டுமென்று உடனே மந்திரிகள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

சென்னை மந்திரிகள் மீது சாட்டப்பட்ட குற்றத்தைப் பற்றி விசாரிக்க டில்லியிலுள்ள மூவர், நியமிக்கப்பட்டனர். டில்லியிலிருந்தே குற்றச்சாட்டுகளை அலசி அலசிப் பார்த்து, சென்னை மந்திரிகள் மாசுமருவற்றவர்களென முடிவுசெய்தார்கள். அவர்கள் அவ்வாறு முடிவு செய்யக் காரணம், காங்கிரஸ் இன்று அடைந்துள்ள நிலைதான். 'காங்கிரஸ் இன்னும் கொஞ்ச நாளைக்காவது இருக்கவேண்டும், அடுத்த தடவையாவது மீண்டும் பதவிக்கு வரவேண்டும்,' என்று அவர்கள் ஆசைப் படுகிறார்கள். அதனால்தான் காங்கிரஸ் கூடாரத்திலேயே சச்சரவு வேண்டாமென்று விரும்புகிறார்கள்.

ஆனால் தோழர் பிரகாசம் விடுவதாக இல்லை. மந்திரிகள் மீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றி சென்னை சட்டசபையிலேயே விவாதிக்க வேண்டுமென்றுதான் அவர் தீர்மானம் கொண்டுவந்தார்; தனக்கென்று ஒரு கோஷ்டி சேர்த்துக்கொண்டு, சட்டசபையில் எதிர்கட்சிப்பக்கம் உட்கார்ந்து கொண்டார். "சட்டத்தின் கட்டுக்கு மீறியதென்று முதல் மந்திரி ராஜா மிரட்டினார் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பேன் என்றார்" பிரகாசம் ஒன்றுக்கும் அசையவில்லை. அதன் பேரில்தான் மேலிடத்திலிருந்து தீர்மானத்தை வாபஸ் [illegible]

தோழர் பிரகாசத்தின் கூற்று வரவேற்கத்தக்கதே. டில்லி [illegible]ல்லாவற்றிலும் தலையிடக் கூடாதென்ற காரணத்தால்.

தோழர் பிரகாசம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரல்ல. அவர் எதிர்கட்சிக்காரர் எப்பொழுதும் அவருக்கு இதுதான் வேலை, மந்திரிகளை நிந்தித்துக் கொண்டுதான் இருப்பார் என்று விட்டுவிட முடியாது. இது ஒரு காங்கிரஸ்காரர் மற்றொரு காங்கிரஸ்காரர் மேல்கொண்டுவந்தக் குற்றச்சாட்டு! உண்மையில் இதில் உண்மை இல்லாமல் போய்விடாது.

தோழர் பிரகாசம் கொண்டு வந்தக் குற்றச்சாட்டுகள் பல திரப்பட்டவை. அவற்றுள் ஒன்றிரண்டு தவிர மற்றவை மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சர்க்காரில் தலைகாட்டக் கூடாதவை. ஆகையால்தான் விசாரித்துத் தகுந்த தீர்ப்பளிக்கப்படவேண்டுவது மிக அவசியமாகும் என்று நேர்மையாளர்கள் விரும்புகிறார்கள்.

"பிரகாசம் கூடத்தான் மந்திரியாக இருந்தபோது லஞ்சம் வாங்கினார், இரண்டு குமாரர்களை லண்டனுக்குப் படிக்க அனுப்பினார்" என்று மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் மந்திரிகள் கூறி வருகிறார்கள். பிரகாசத்தின் மீதும் லஞ்சக் குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகையால் எங்கள் பேரிலும் குறையிருந்தால் கவலையில்லை என்று கூறுவதுபோல் இருக்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

"கிசான்கள் மீது தீவிர நடவடிக்கை எடுங்கள்"

—————(0)—————

போலீசுக்கு மக்கள் பிரதிநிதிகள் சிபார்சு!

திருவாரூர், மார்ச் 31—

'கிசான்கள் அதிகத் தொல்லை தருகிறார்கள்; அவர்கள் அட்டகாசம் சகிக்க முடியவில்லை. உடனே அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று, தஞ்சை ஜில்லா போலீஸ் அதிகாரியை மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் நன்னிலம் தாலுகா காங்கிரஸ் கமிட்டி கேட்டுக்கொ[illegible]

[illegible] ...பகித்தவராவா.

தஞ்சாவூர் கிசான்கள் நாள் முழுவதும் நிலத்தில் உழைத்தகூலி சிறிது அதிகம் தாருங்கள் என்று கேட்பவர்கள். பெரும்பான்மையோருக்கு எழுத்துவாசனையே கிடையாது ஏதோ கூலி பற்றவில்லையென்று ஒரு முகமாகக் கூடிக் கேட்கிறார்கள்.

தாலுகா காங்கிரஸ் கமிட்டி போலீஸ் அதிகாரியைக் கொள்வது கிசான்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று, இதன் பொருள். தஞ்சைக்குச் சென்றுவந்தோருக்கு நன்றாகத் தெரியும். 'கூலி பற்றவில்லை அறுவடைசெய்யமாட்டோம்' என்று பல தொழிலாளிகள் வீட்டிலேயே தங்கிவிடுவார்கள். உடனே பண்ணை சொந்தக்காரர் (பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களாக இருப்பவர்) உடனே போலீசுக்குச் செய்திதெரிவிப்பார். போலீஸ் படை வரும். கிசான்களை கடடாயப்படுத்தி கசையடி கொடுத்து ஒன்று திரட்டிப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் வேலை செய்ய முடியாது என்று பிரிந்து செல்ல முயன்றால், கிளர்ச்சி செய்தார்கள் என்று துப்பாக்கிப்பிரயோகம்!

இதுபோல் நடக்கிறது தஞ்சையில். பண்ணையாட்சி மீது எவனாவது பேசினால் அவன் கம்யூனிஸ்டு என்று கூறிச் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்! இல்லை விட்டால் சிறையில் அடைத்துவிடுவார்கள்.

காங்கிரஸ் கமிட்டி போலீசுக்கு அறிவித்ததோடு நிற்கவில்லை. கம்யூனிஸ்டு நடவடிக்கைகளைத் தடுக்க ஒரு கமிட்டி வேறு அமைத்திருக்கிறார்கள்

ஜமீன் ஒழிப்பு

———

சென்னை, ஏப். 1—

அரசாங்கம் தன் வசப்படுத்திக் கொண்ட ஜமீன்களுக்கு நஷ்ட ஈடாக கொடுக்க விஜயநகரத்திலுள்ள டிரிபியூனலில் 7503178 ரூபாயும் மதுரை டிரிபியூனலில் 3655415 ரூபாயும் தாக்கல் செய்துள்ளார்கள். இது சம்பந்தமான [illegible] கெஜட்டில் வெளிவரும்

ஐ. நா. உருப்படுமா?

லேக்ஸக்ஸஸ், ஏப். 4—

ஐக்கிய நாட்டு சமூகக் கௌன்சில் கூட்டத்தில் தேசிய சீனப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதால், ரஷியாவும் போலந்தும் வெளியேறிவிட்டன. ஐ. நா. கூட்டங்களிலிருந்து சீனப் பிரச்சினைக்காக ரஷியா வெளியேறுவது இது 18-வது தடவையாகும்

தேசீயச் சீனப் பிரதிநிதிகள் சபையில் அங்கம் பெற்றிருக்கத் தகுதியற்றவர்களென்றும், அவர்கள் இருக்கும் சபையில் ரஷியா கலந்து கொள்ளாதென்றும் ரஷியப் பிரதிநிதி ஜாக்கப் பேசினார்.

'நான் தாய்நாடு செல்ல விரும்புகிறேன்'

காவலில் வைக்கப்பட்ட சாம்பசிவத்தின் அவா

தோழர் சாம்பசிவத்தை விடுதலை செய்யவேண்டுமென்று பிரிவிகௌன்சில் முடிவுசெய்த உடனே, அவரைக் காவலில்வைக்க அனுமதிக்கும்படி ஜொஹூர் போலீஸ் மலேயா அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. தமிழ் இளைஞர் தோழர் சாம்பசிவம் சென்ற சனிக்கிழமையன்று சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, சில அடிகள் நடந்து செல்வதற்குள் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இச்செய்தியைக் கொடுத்த ஜொஹூர் சி ஐ. டி. அதிகாரி பெடரல். அரசாங்கம் தோழர் சாம்பசிவத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டுமென்று கூறினார்.

"நான் நாடுகடத்தப்படப் போகிறேன். அப்படியானால் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நான் இந்தியாவுக்குத் திரும்பிச்செல்ல விரும்புகிறேன்" என்று தோழர் சாம்பசிவம் கூறியதாக, 'மலேயா ட்ரிப்யூன்' என்னும் செய்தித்தாள் கூறுகிறது.

இந்தியப் பிரதிநிதி தோழர் ஜான் திவி சாம்பசிவத்தைப் பற்றி, மலேயா சமஷ்டி அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாகக் கூறப்படுகிறது.

நீர்வாயுக்குண்டு விமானத்தில் பறக்காது

அவ்வளவு கனமுள்ளதாம்!

நியூயார்க், ஏப். 4—

ஜலவாயுக்குண்டு (ஹைட்ரோஜன் வெடிகுண்டு) விமானத்தில் ஏற்றிச்செல்ல முடியாத அளவுக்குக்கனமுள்ளது என்று, யு.எஸ். அணுக்குண்டு நிபுணரும் அணுசக்தி கமிஷன் ரிப்போர்ட்டை பெர்னார் ரூர்சுடன்தயாரித்தவருமான ஜான் ஹான்காக்கூறுகிறார்.

யுத்த விமானங்களில் அதை நிச்சயமாக எடுத்துச்சென்று வீசமுடியாதென்றும், ஆனால் ராக்கெட் விமானங்களில் அதை எடுத்துச்செல்ல முடியலாம் என்றும் அவர் கூறுகிறார்.

ரஷ்யர்கள் தங்களுக்கு வேண்டிய சமயத்தில், இந்தக் குண்டை வெடிக்கும்படியான சக்தியைப்பெற்றிருக்கிறார்கள் என்பதற்கான ருசு எதுவும் இல்லை என்று கூறுகிறார்.

தலைமைக் காரியாலயம்

கட்டட அமைப்புச் செலவுக்காக

தங்கள் அன்பளிப்பை

அனுப்பிவிட்டீர்களா?

இன்றே தருக!

மாலை மணி

சென்னை 5—4—50 புதன்கிழமை

கைவிட வேண்டும்

"இந்நாட்டு மக்களிடையே வகுப்புவாதமும், பணக்காரன் ஏழை என்ற மனக்கசப்பும் இருந்து வருகிறது. இது நீங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு சலுகை காட்ட வேண்டியதும் அவசியந்தான். ஆனால் அவர்கள் அதையே சாக்காக வைத்துக்கொண்டு, மேல் வகுப்பினர் மீது எப்பொழுதும் குறைகூறிக்கொண்டிருப்பது கூடாது."

இது அமைச்சர் மாதவமேனன் அவர்களின் உபதேசம்! அண்மையில் காஞ்சியில் பாடசாலை ஆண்டுவிழா ஒன்றுக்குத் தலைமை வகித்துப் பேசியபோது இந்த 'அரிய உபதேசத்தை' அவர்திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

மிகப் பெரிய பிரச்னைகளை சர்வ சாதாரணமாக மதித்து "அவை தீரவேண்டியவைதான்; ஆனாலும் அப்படிச் செய்யக்கூடாது, இப்படிச் செய்யக் கூடாது' என்றெல்லாம் நீதோபதேசம் செய்கிறார் அமைச்சர். அவர் பேசிய இடம் பாடசாலை என்ற காரணத்தாலோ என்னவோ, அவரது உபதேசமும் சிறுவர்களுக்குச் செய்யும் உபதேசமாகவே காணப்படுகிறது!

பணக்காரன்—ஏழை; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதங்கள் ஒழியவேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்திருக்கிறார். அப்படி உண்மை நிலையை உணர்ந்திருக்கும் இந்த அமைச்சரும், இவர் சார்ந்துள்ள கட்சியும், இவரது ஆட்சி முறையும் இந்த பேதங்களை ஒழிக்க இதுவரை செய்த, செய்கின்ற செயல்கள் யாவை?

ஏழை—பணக்காரன் என்ற பேதம் ஒழியவேண்டுமானால், முதலில் தொழிலாளர் பிரச்னை சரிவர தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். தீர்க்கப்படாவிடினும், தொழிலாளருடைய நம்பிக்கையைப் பெறும் வகையிலே ஏதேனும் ஆக்க வேலையில் ஆட்சியாளர் இதுகாறும் ஈடுபட்டிருக்கவேண்டும். செய்தார்களா?

அதற்கு மாறாகச் சட்டங்களின் துணையைக் கொண்டு, தொழிலாளரின் கிளர்ச்சி பல அடக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி, பொருளாதார சமத்துவம் ஏற்படுவதற்கு ஏற்றச் சூழ்நிலையையும் ஏற்படுத்தவும் ஆட்சியாளர் முயலவில்லை. அவசியமான பணிகளில் ஈடுபட்டிருப்போர் நிலை உயராவண்ணம் மிகக்குறைந்த ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கோர் எடுத்துக்காட்டு வேண்டுமெனில் பள்ளிக்கூட ஆசிரியர்களின் ஊதிய நிலையே போதிய சான்றாகும்.

அமைச்சர் மாதவனார் கல்வி அமைச்சர் என்ற முறையிலே, பள்ளி ஆசிரியரின் நிலையினை நன்கு அறிந்திருப்பார். பள்ளியாசிரியர்களுக்கு [illegible] அளிக்கப்பட்டு வரும் [illegible] மிகமிகக் குறைவு. [illegible] குறைபாட்டை நீக்க ஆட்சியாளரால் முடியவில்லை நெடுநாட்களாக. ஆசிரியர்களும் தமது குறைகளை அரசியலார்க்கு எடுத்துரைத்து அலுத்துப்போய்விட்டனர். இளைஞர்களின் அறிவைப் பண்படுத்தும் அவசியமான பணியைச் செய்யும் ஆசிரியர்களின் நிலையே இப்படியிருக்குமானால், நாட்டிலே எங்ஙனம் அமைதி குடிகொள்ள இயலும்? பணக்காரன்—ஏழை என்ற பேச்சும், அதனை அடிப்படையாகக் கொண்ட குமுறல்களும் எப்படித் தோன்றாமலி[ருக்கும்?]

எனவேதான், மனக் கசப்பு வளருகிறது நாட்டில். இம்மனக்கசப்பு ஒழியவேண்டுமானால், மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அதற்கான வழிவகைகளைக்கான அரசியலார் முயலவேண்டுமேயன்றி, "அவசியந்தான்" தீர்க்கப்பட வேண்டியதுதான் என்றெல்லாம் ஆறுதல் கூறிட இது காலமல்ல. அர்த்தக் கால அளவைத் தாண்டிவந்து விட்டனர் மக்கள்.

அது போலவேதான் உயர்வு தாழ்வு என்ற பேதமும். இதுவும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையே. இதுபற்றிப்பேசவேண்டியவை-எழுதவேண்டியவை எல்லாம் தீர்ந்து விட்டன. இனி செயலாற்ற வேண்டியதுதான் எஞ்சியுள்ளது. இப்படிப்பட்ட நிலையிலேதான், "தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகை காட்ட வேண்டுவது அவசியம், ஆனால் அவர்கள் இதையே சாக்காகக் கொண்டு மேல் வகுப்பார் மீதுஎப்பொழுதும்குறைகூறிக் கொண்டிருத்தல் கூடாது" என்று அமைச்சர் பேசியிருப்பது பொருந்தாது என்போம். வகுப்புகள் உள்ளவரையில் வகுப்பு வாதம் இருந்தே தீரும். அது கூடாது என்று அழகுப் பேச்சுகள் பேசுவதில் இனிப்பயனில்லை. மேல்வகுப்பு என்ற பேதம், இன்னமும்மலையும் மடுவுமாக இருந்து வருகிறது. இந்த மிகப்பெரிய வேற்றுமை நீங்கும்வரை, கீழ் வகுப்பார் எனப்படுவோர் மேல் வகுப்பாரிடம் வெறுப்பு காட்டுவதிலோ, குறை கூறுவதிலோ ஆச்சரியம் எதுவும் இருக்கமுடியாது.

வேற்றுமை இருக்கத்தான் செய்யும். ஆனால் வேதனை மட்டும் கூடாதுஎன்றால், இது நடைமுறைக்கு ஒவ்வுமா என்பதை அமைச்சர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனவே, முதலில் பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும் மக்கள் கொண்டுள்ள வேதனையைத் துடைக்க வேண்டியது ஆட்சியாளர் கடன். அதை விடுத்து வேதனை படுவோரிடையே சென்று வெட்டிப் பேச்சுப் பேசுவதில் பயனில்லை. அது போலவே குறைகூறுவோர் மீதுகுறைகூறும் கோணல்புத்தியையும் கைவிடவேண்டும்.

அட்லாண்டிக் கடலில் மூழ்கிமறைந்த கண்டம்

கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சி

லண்டன், ஏப். 4—

அட்லாண்டிக் சமுத்திரத்தில் அட்லாண்டிஸ் என்ற கண்டம் மூழ்கி போய்விட்டது குறித்து ஆராய்வதற்காக, இப்பொழுது முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடலுக்கடியில் ஆராயும் கருவிகள், போட்டோபிடிக்கும் சாதனங்கள் இவைகளைக் கொண்டு இம்முயற்சியில் இறங்க எகர்டன் ஸைக்ஸ் முன்வந்திருக்கிறார்.

கடலுக்கடியில் போட்டோ எடுப்பதில் நிபுணரான ஒருவர் ஸைக்ஸுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கிறார்.

இக்கண்டம் சுமார் 1000 வருஷங்களுக்கு முன்புதான் மூழ்கியிருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

இம்மாதிரி ஒரு கண்டம் கடலுக்குள் அமிழ்ந்திருக்கிறது என்பதற்கான ருசுக்கள், இதுவரைப் பல கிடைத்துள்ளனவாம்.

மோட்டார் சைகிளில் உலக சுற்றுபிரயாணம்

மாஞ்செஸ்டரைச் சேர்ந்த ஜான் மார்பிரேமன் என்பவர், மோட்டார் சைகிளில் உலக சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்து இன்று வந்து சேர்ந்திருக்கிறார். இவர் செப்டம்பரில் லண்டனை விட்டுப் புறப்பட்டு, பிரான்ஸ் [illegible]வின், டாஞ்ஜியர், [illegible] [illegible]

[illegible] காலத்திற்குள் [illegible] சுற்றுப்பிரயாணம் மோட்டார் சைகிளிலேயே செய்ய உத்தேசித்திருந்தார். ஆனால் தன் மகன் [illegible]த்தில் சேரும்படி அழைக்கப்பட்டான் என்ற செய்தி கேட்டதும், இவர் [illegible] திரும்ப உத்தேசித்துவிட்டார்.

நன்றி அறிவிப்பு

26—3—50 ஞாயிறன்று வாழ்க்கை யொப்பந்தம் செய்து கொண்ட எங்களைப், பாராட்டியும், வாழ்த்தியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிவைத்தத் தோழர்கள் அனைவர்க்கும், இதன் மூலம் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். வணக்கம்.

ஆர். விசாலாட்சி
இரா. நெடுஞ்செழியன்
சேலம் 5—4—50

'நான்ஒருஎலும்புக்கூடு'

பெர்னாட்ஷா கூறுகிறார்

லண்டன், ஏப். 4—

ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவின் நண்பர் ஒருவர் தன் பெண் கலியாணத்தில் நடக்கும் விருந்துக்கு வந்து தன்னை கௌரவிக்கும்படி அழைப்பு அனுப்பியிருந்தார்.

இதற்கு ஷா எழுதியுள்ள போஸ்ட்கார்டில் தன்னால் வருவதற்கில்லை என்பதைத் தெரிவித்து தன் வயது 93 என்பதையும் குறிப்பிட்டு எழுதியிருந்ததாவது:—

"இம்மாதிரி விருந்துகளில்எலும்பும் தோலும் உள்ள கிழவன் கலந்துகொள்ளாமல் விலகியிருப்பதே மேல். என் தோற்றத்தில் வெளியே வரக்கூட நான் சக்தியற்றிருக்கிறேன்.

ஜெர்மன் யுவர்கள் எழுச்சி

லண்டன், ஏப். 4—

அடுத்த மாத முடிவில் பெர்லின் மீது படையெடுக்க 'சுதந்திர ஜெர்மன் யுவர்' படை திட்டம் போட்டிருக்கிறதென்[illegible]

[illegible]றும், மிகவும் [illegible] நிலைமை இதனால் ஏற்படலாம் என்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஹைகமிஷனர் ஜான் மக்லாய் கூறுகிறார்.

இந்த ஜெர்மன் யுவர் சங்கத்தில் 20 லட்சம் பேர் இருக்கின்றனர் என்றும் இவர்களுக்குப் பயிற்சி போதுமான அளவுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், கிழக்கு ஜெர்மன் போலீஸ் படையில் 45000 பேர் இருக்கின்றனர் என்றும் இந்த எண்ணிக்கை இன்னும் பன் மடங்கு பெருகலாம் என்றும் மக்லாய் கூறுகிறார்.

அந்நியரை மணக்க பர்மிட் வேண்டும்!

காமின்பாரம் நாடுகளில் உத்தரவு

லண்டன். ஏப். 4—

ருமேனியாவும் ரஷ்யாவிலுள்ளது போன்ற திருமண சட்டங்களை அமுல்நடத்தும் ஏற்பாடு அமுலுக்கு வந்திருக்கிறது. இதன்படி ருமேனியர் யாரும் அந்நியரை மணந்துகொள்ளவேண்டுமென்றால் அரசாங்க பர்மிட் பெற்றாக வேண்டும். ஹங்கேரியிலும் இம்மாதிரி சட்டம் ஒரு வருடத்திற்கு முன்பே அமுலுக்கு வந்திருக்கிறது.

டாலர் நாட்டில் குப்பைத்தொட்டிகள் 'அபேஸ்'!

நியூயார்க், ஏப். 4—

நியூயார்க்கில் தெருவோரங்களில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1000 குப்பைத்தொட்டிகளில் 750-க்கு மேல் திடீரென்று மறைந்துவிட்டன. இவைகளை யார் களவாடிச் சென்றனர் என்பது தெரியவில்லை.

போலீசார் தீவிரமாக தேடிய பின், ஒரு போர்ட்டர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர்கூட போதிய சாட்சியம் கிடைக்காததால் விடுவிக்கப்பட்டார்.

ஏப்ரல் 10

"இலட்சிய வரலாறு" என்ற புத்தகத்தைத் தீட்டியதற்காக சி. என். ஏ. மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, ஏப்ரல் 10-ந் தேதி, சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது.

24-3-50 அன்று, சென்னை "மாலைமணி" நிலையத்தில் செயற் குழுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், சி. என். ஏ. வுக்குச் 'சம்மன் சார்வு' செய்யப்பட்டது.

புத்தகத்தை வெளியிட்ட திராவிடப்பண்ணை உரிமையாளருக்குச் சம்மன் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஏப்ரல் 10-ந்தேதி, சி. என். ஏ. கோர்ட்டில் ஆஜராவார்.

சணலுக்குப் பதில் உபயோகிக்கும் பொருள்

லண்டன், ஏப். 4—

சணலுக்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய புதுப் பொருள் உற்பத்தி விஷயமாக ஜவுளி முதலாளியான ஜோசப் ராம்ஸ்டென் ஒரு அறிக்கையைப் புள்ளி விவரங்களுடன் வெளியிட்டிருக்கிறார் அவர் அதில் கூறுவதாவது:—

இந்தியாவும், பாகிஸ்தானும், சணல் தொழில் விஷயமாக ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லை என்றால், சணல் சப்ளை வருஷாவருஷம் குறையும். சென்ற வருஷமே அமெரிக்காவில் சணல் உற்பத்தி சுமார் 15 [illegible] [illegible]து. இன்னும் [illegible]

[illegible] வருகிறது.

ராம்ஸ்டன் கம்பெனியே இந்த சணலுக்குப் பதில் பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது.

அவர் செய்யும் பணி!

சென்னை, ஏப். 4—

சென்னை ஓவிய நிபுணரும், எழும்பூர் சர்க்கார் சித்திர கைவேலை பள்ளியில் சித்திர இலாகா தலைவருமான தோழர் கே. வி. எஸ். மணிகர் சமீபத்தில் வரைந்துள்ள மகாத்மாகாந்தியின் முழு உருவ அளவு படத்தைத் தோழர் தேவதாஸ்காந்தி விலை கொடுத்து வாங்கி தேசிய மியூஸியத்திற்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்.

இந்தப் படத்தை சமீபத்தில்புதுடில்லியில் நடைபெற்ற சர்வோதய கண்காட்சியில் ராஜ கட்டத்தில் காந்திஜியின் மண்டபத்தில் வைக்கப்பட்டது.

இதில் காந்தியார் உட்கார்ந்திருக்கும் நிலைமையில், ஒரு கையில் கடியாரத்தையும், மற்றொரு கையில் கீதை கதர் நூலை வைத்திருப்பதாக வரையப்பட்டுள்ளது.

எண்ணெய் வர்ணத்தினால் தீட்டப்பட்ட இந்தப் படம் 7 அடி நீளம் 5 அடி அகலம் கொண்டது.

தங்க பங்குகளின் விலை குறைந்ததேன்?

லண்டன்,ஏப். 14—

மார்ச் மாதம் முதல் தங்க பங்குகளின் விலை குறைந்ததற்குக் காரணம் என்ன என்பது பற்றி நியூஸ் கிரானிகிள் பத்திரிகை எழுதியிருப்பதாவது: தங்கத்தின் விலை குறைந்து வருவது ஒரு காரணம் என்றும், தங்கச் சுரங்கத்தொழிலாளர் அதிக சம்பளம் கோருவதும்தான் காரணம் என்றும் அப்பத்திரிகை கூறியிருக்கிறது. —ராய்டர்

அடிப்படை மாற ஆட்சி மாற வேண்டும்

'நாட்டுக்கு நல்லது செய்வோருக்கே ஓட்டு கொடுங்கள்'

சேரிவாழ்வோர் மாநாட்டுச் சொற்பொழிவுகள்

சென்னை, ஏப். 5—

சென்னை நகரப் பூங்காவிலுள்ள இடைவெளியில் சென்ற ஞாயிறன்று மாலை சேரிவாழ்வோர் மாநாடு நடந்தது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

சென்னை நகராண்மைக்கழக முன்னாள் உதவி மேயர் தோழர் எஸ். பக்கிரிசாமி பிள்ளை தம்முடைய வரவேற்புரையில், 'குடிசைகளில் வசிக்கும் எல்லோரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளலாமென்றும், மாநாடு ஒரு கட்சியைப் பற்றியதோ அல்லது ஜாதியைப் பற்றியதோ அல்லவென்றும் கூறினர். சேரி வாழும் மக்கள் தன்மான உணர்ச்சியுடன், சொந்த முயற்சியுடன் முற்போக்குக்குப் பாடுபட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். நுங்கம்பாக்கத்தில் தாழ்த்தப்பட்டோர் போலீசாரால் தாக்கப்பட்டு, அடக்குமுறை செய்யப்பட்டனரென்றும் அவர் கண்டித்துப் பேசினர்.

[illegible]

...அந்தோணிப்பிள்ளை த...மை உரையில் சேரிகள் ஒழிக்கப்படுவதற்காகச் சேரி மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று கூறினர். 1917-ல் சேரிவாழ்வோர் நிலைமையை ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது என்றும், இக்கமிட்டியின் சிபார்சுகள் யுத்த பிற்கால பிரச்சினையால் அரசாங்கத்தால் அமுல் செய்ய முடியவில்லையென்றும் கூறப்பட்டது. ஆனால், இன்று வரையில் நிலைமையில் மாறுதல் ஏற்படவே இல்லை" என்று கூறினர்.

நகராண்மைக் கழகமும் இதற்காகப் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லையென்று அவர் அறிவித்தார்.

தோழர் முருகேச பாகவதர் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், மாதந்தோறும் மழை வருவதால் அவலநிலையடையும் ஏழை சேரிமக்களின் நிலையை மாற்றவேண்டுவது மிக அவசியமென்றும், தோழர் சா. பி. டி. தியாகராயர் அன்று சேரிவாழ்வோர் நிலை உயர்த்தப்படவேண்டுமென்று கூறியும் இன்றுவரை ஒன்றும் செய்யப்படவில்லையென்றும் குறிப்பிட்டார்.

தோழர் செ. ஜி. சிவசாமி பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகம், சோஷலிஸ்டுக் கட்சி, ஏழை மக்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினாலொழிய, நாட்டுக்கு விமோசனம் இல்லையென்று கூறினர். யாருக்கு ஓட்டு கொடுத்தால் சாதாரண ஜனங்களுக்குச் சௌகரியம் ஏற்படுமென்று பார்த்தே ஓட்டு போடவேண்டுமென்று அவர் அறிவித்தார். மக்களைச் சுரண்டும் அரசாங்கத்தைத் தவிழ்க்கவேண்டுவது அவசியமென்று தோழர் சிவசாமி அறிவித்தார்.

நகராண்மைக்கழக உறுப்பினர் தோழர் வி. முனுசாமி பேசுகையில், நகராண்மைக் கழகத்திலுள்ள சேரிகளிலெல்லாம் குடிதண்ணீர் சௌகரியம் விளக்கு வசதியும் இருக்கிறதென்றும், ஆனால் தனிப்பட்டவர் நிலங்களில் உள்ள சேரிகள் தான் கீழ்த்தரமான நிலையில் உள்ளதென்றும் கூறினர். அரசாங்கம்தான் இதற்கு வேண்டுவன செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர்.

மற்றும் தோழர்கள் எக்...வேலவர்தன், என். எஸ். தங்கராஜன் ஆகியவர்கள் பேசினர்கள்.

நகரிலுள்ள சேரிகள் நிலமாற்றப்பட வேண்டுமென்றும், அரசாங்கமும், கார்ப்ப...

[illegible]

...ன்... தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகராண்மைக் கழகம் சேரிகள் முன்னேற்றத்திற்காக ரூபாய் 1½ லட்சம்தான் ஒதுக்கியுள்ளது. இது போதாதென்று கூறுவதுடன், சேரிகளின் நிலை மற்ற நகரப் பகுதிகள்போல் அமையும்வரை ஆண்டொன்றுக்கு 50 லட்சம் அரசாங்கம் ஒதுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்காக ஆவனசெய்ய மந்திரிமாரைப் பேட்டி காண தோழர்கள் சி. என். அண்ணாதுரை, எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை, எஸ். பக்கிரிசாமி பிள்ளை, என். ஜீவரத்தினம், வி. வி. முருகேசபாகவதர், சி. எச். ஷியகதுல்லா, டாக்டர் மார்த்தாண்டம்பிள்ளை ஆகியவர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்க மாநாடு முடிவு செய்துள்ளது. (க-ரி)

கலைவாணருக்குப் பாராட்டு

சிதம்பரம், ஏப். 3—

இவ்வூர் கூத்தத் தாண்டவர் கலைக்கழகத் துவக்க உதவி நிதிக்காக தோழர் சிஸ். எ. ஜெயராமன் அவர்கள் முயற்சியால் 25-3-50 இரவு தேவி நாடகசபை அரங்கில், நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் காந்திமகான் வில்லுப் பாட்டும், கிந்தனார் காலட்சேபமும் நடத்தினார்கள். பொதுமக்கள் அளவுகடந்த ஆதரவு காட்டினர். அதுபோது சிதம்பரம் திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஒரு பாராட்டிதழ் தோழர் என். எஸ். கிருஷ்ணனுக்கு வாசித்தளித்ததுடன், கலைஞர்க்கும் பல்வேறு வரவேற்புகளும் வழங்கப்பட்டு, விழா இனிது முடிந்தது. (ஓ-ரி)

தஞ்சை மாவட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

குடந்தை, மார்ச். 3—

2-4-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குக் குடந்தை பஞ்சுக்காரத்தெரு பெரியார் மாளிகையில் த. மா. தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

கிளைக் கழகங்களால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட 48 அங்கத்தினர்களில் 38 பேர் வந்திருந்தனர். கூட்டத்திற்கு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை வகித்தார்.

கீழ்க்கண்டபடி மாவட்டக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் பொருள் உறுப்பினர், துணைச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ, விளம்பர உறுப்பினர் தோழர் பி. பராங்குசம். கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் பின்னும் தேர்ந்தெடுத்தனுப்பப்படும் பிரதிநிதிகளும் மாவட்ட போதக் குழுவினராக அமைவார்கள்.

தீர்மானம்

ஈரோடு வைத்தியவள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கும், பட்டுக்கோட்டை தளபதி கே. வி. அழகிரிசாமி அவர்களின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கிறது.

பொதுச்செயலா...

[illegible]

...தஞ்சை... மாநாட்டுக்கு ...ளாக அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர் நன்றிகூற கூட்டம் இரவு 8-30க்கு முடிந்தது என, விளம்பர உறுப்பினர் தோழர் பராங்குசம் அறிவிக்கிறார்.

வேண்டுகோள்

அன்புடையீர்!

நாகர்கோவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கிராமந்தோறும் வேனிற்கால விடுமுறையைப் பயன்படுத்தி, கழக இலட்சியத்தை விளக்கி, பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய மேற்படி கழகக் கமிட்டி தீர்மானித்திருப்பதோடு, அதற்கான பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு இரண்டாவதுவாரத்திலிருந்து கழகக் கட்டிடத்தில் வைத்து பயிற்சி வகுப்பு நடைபெற வழிவகை செய்திருப்பதையும் பொது மக்களுக்கும், முக்கியமாக மாணவர்களுக்கும் இதனால் தெரிவித்துக் கொள்கிறேன். கழக இலட்சியத்தில் பற்றும், உறுதியும் கொண்டவர்கள், பிரச்சாரப் பயிற்சி பெற விரும்பினால், அதற்கான முழு விவரத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடித மூலமாகவோ, நேரில் வந்தோ தெரிந்து கொள்ளவும்.

அன்பன்
கி. மனோகரன்
விளம்பர உறுப்பினர்.
நகர தி. மு. கழகம், நாகர்கோவில்
நாஞ்சில் மாவட்டம்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

6-4-50

வேலூர்:—(சேலம் மாவட்டம்) என். வி. நடராசன்.

7-4-50

சன்னசி நல்லூர்:—சி. பி. சிற்றரசு, எ. பி. தர்மலிங்கம்.
திருச்செங்கோடு:—என். வி. நடராசன்.
கோவை:—ஈ. வி. கே. சம்பத், பி. பழனிசாமி.

8-4-50

செந்துறை:—சி. பி. சிற்றரசு, அ. பெ. தர்மலிங்கம், எம். எஸ். மணி.
ஆரணி:—என். வி. நடராசன், புலவர் கோவிந்தன்.

லண்டனில் இந்திய ஜவுளி கண்காட்சி நீடிப்பு

லண்டன், ஏப். 4—

லண்டனில் இந்திய ஹைகமிஷன் நடத்திவரும் ஜவுளிக்கண்காட்சிக்கு ஏராளமானவர் இன்னும் விஜயம் செய்துவருவதால், மே மாதம் பிரிட்டிஷ் கைத்தொழில் கண்காட்சி நடைபெறும்வரை இதை நீடித்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய ஜவுளி, ஜமக்காளம் முதலியவை பிரிட்டிஷார் கவனத்தைமட்டுமின்றி அமெரிக்கர்களின் கவனத்தையும் அதிகம் கவர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

ரயில் வேலையில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

...ண்டு சிப்பந்திகள் தண்டிக்கப்பட்டனர்

இந்திய ரயில்வேக்களில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளின் பலனாக மேலும் இரண்டு சிப்பந்திகள் தண்டனையடைந்திருக்கின்றனர்.

ஜி. ஐ. பி. ரயில்வேயில் உதிக் காங்காட் ஸ்டேஷனில் காவல்காரனாக இருந்துவந்த துகாராம் என்பவர் அங்குவந்திறங்கிய வெட்டுமரத்தைக் காவல் காப்பதற்காக ஒரு வியாபாரியொருவரிடமிருந்து சட்டவிரோதமாகப் பணம் வாங்கிய குற்றத்துக்காக 150 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் நான்குமாதக் கடுங்காவலும் விதிக்கப்பட்டார்.

பி. என். ரயில்வேயில் மால்டிபத்பூர் ஸ்டேஷனில் உதவி ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த நானி கோபால்பட்டாச்சார்ஜி என்பவர், மால்டிபத்பூரிலிருந்து பிராமண்...விக்கு பாசஞ்சர் வண்டியில் 7 மணங்கு தேங்காயை அனுப்புவதற்காக ஏழு ரூபாய் லஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக 300 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மூன்றுமாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டார். (ஏ. பி. ஐ)

கோர்ட்டில் பூனை கத்தியது!

லண்டன், ஏப். 4—

ஒரு இங்கிலீஷ் ஹைக்கோர்ட்டில் பூனையின் 'மியவ்' சப்தம் அடிக்கடி கேட்டதன் விளைவாக, கோர்ட் நடவடிக்கைகள் நிறுத்தி பூனையைத் தேடும்படி நீதிபதி உத்திரவிட்டார். எவ்வளவு தேடியும் பூனை அகப்படவில்லை. அது எங்கேயோ அப்படியே கொண்டு கத்திக்கொண்டே இருந்தது.

ஊனமடைந்த உறுப்புகளுக்குப் பதிலுறுப்புகள்

பர்மாபடைவீரர்களுக்கு பூனாவில் சிகிச்சை

மூன்றுவது கோஷ்டி கிளம்புகிறது

...ன்னின் மத்திய பர்மா போராட்டங்களில் ஈடுபட்டிருந்தபோது காயம்பட்டு உறுப்புக்களை இழந்தெக்க வேண்டியவர்களாகிவிட்ட, சர்மிய சேனையில் சேர்ந்த படை வீரர்களான ஆறு தொகுப்புகள் மார்ச் 21 தேதியன்று ரங்கூனிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட எஸ். எஸ். ஜலகோபால் என்னும் கப்பலில் பயணமாகிவருகின்றனர். பூனாவில் இந்திய சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் செயற்கை எலும்புச் சிகிச்சை நிலையத்தில் கவனிக்கப்படுவதற்காக இவர்கள் வருகிறார்கள்.

இந்த நிலையத்தில் சிகிச்சைபெறுவதற்காக இந்தியாவிலுள்ள பொது மக்களும், ராணுவத்தினர்களும் ஏராளமாய் இருப்பதால் நெருக்கடி இருந்தபோதிலும், பர்மா சர்க்காரின் கோரிக்கைக்கு இணங்கி இந்திய சர்க்கார் இந்நிலையத்தில் ஆண்டுவாரி சில இடங்களைப் பர்மா ராணுவத்துக்கு ஒதுக்கித்தர இசைந்திருக்கிறார்கள். (ஏ. பி. ஐ)

மதுரையில் 144!

மதுரை, ஏப். 4—

மதுரையில் நேற்றிலிருந்து இரண்டு வாரங்களுக்கு 144 வது செக்ஷன் கிரிமினல் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பொதுக்கூட்டங்கள் நடத்தக் கூடாது.

தடை உத்தரவுக்கு மதுரை நகர மாஜிஸ்ட்ரேட் தோழர் எஸ் அருண்தாஸ் காரணம் கூறுவதாவது:

"மதுரை மீனாட்சி ஆலை கதவடைக்கப்பட்டிருப்பதாலும், மற்றும் சில ஆலைகளில் ஆள் குறைப்பதாலும், பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளதால் ஏராளமான தொழிலாளிகள் மதுரையில் வந்து குவிந்துள்ளனர். வேலையில்லாத் தொழிலாளர் எந்த நேரத்திலும் குழப்பமேற்படுத்தக் கூடும்; கொஞ்சம் தூண்டப்பட்டால் கூட உடனே அமைதி குலைந்து பொது மக்களின் வாழ்க்கைக்குப் பங்கமேற்படுமென்று நான் கருதுவதால்தான் இத்தடை உத்தரவு பிறப்பிக்கிறேன்"

இனி நடப்பவை

கோவை:—இவ்வூர் தி. மு. க. சார்பில், கே. வி. அழகிரிசாமி நினைவுநாள் பொதுக் கூட்டம், 7—4—50 வெள்ளி மாலை 6-30 மணிக்கு, நகர கழகத்துக்கு முன்புறமுள்ள தெப்பக்குளம் வீதி மைதானத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், பி. பழனிசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

தி. மு. கழகக் கிளைகள்

———(0)———

புதுப்பாளையம்—சிற்றூர்க்கிளை

புதுப்பாளையம், மார்ச். 30—

19-2-50 அன்று காலை இவ்வூர் ஆனந்தவன் உணவு விடுதியில், திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் பு. ம. கிருட்டினன் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அதுபோது, திராவிடர் கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்—புதுப்பாளையம் சிற்றூர்க்கிளை" என ஒரு மனதாக மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்கள் :—கு. கோபால்சாமி, ச. கோவிந்தசாமி; துணைச் செயலாளர்கள் :—முனுசாமி, தி. கோபால்; பொருள் உறுப்பினர்:—அண்ணாமலை. ஏனைய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

குத்தாலம்—சிற்றூர்க்கிளை

குத்தாலம், மார்ச் 23—

22—3—50 அன்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வூரில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகம்—குத்தாலம் சிற்றூர்க்கிளை' நிறுவப்பட்டு, கீழ்க்காணும் செயற்குழுவை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-பி. எஸ். கணேசன் பொருளாளர்-நடேசன்; விளம்பர உறுப்பினர்-ஆர். அப்பாசாமி; ஏனைய செயற்குழுவினர்:- சந்தான கிருஷ்ணன், என். சீனிவாசன், சி. வெங்கடேசன், எம். அரங்கசாமி, எஸ். மதனகுருசாமி, ஜி ஆதிகேசவன், பி. சாமிநாதன், சுந்தரமூர்த்தி, மாரியப்பன்.

* * *

கோட்டூர்மலையாண்டிப்பட்டணம்—சிற்றூர்க்கிளை

கோ. ம. பட்டணம், மார்ச். 22—

21—3—50அன்று பொள்ளாச்சி தோழர் பி. என். இராமானுசம் அவர்கள் தலைமையில் தி. மு. க. அமைப்புக் கூட்டம்நடைபெற்றது கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்-கோட்டூர் மலையாண்டிப் பட்டணம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின் கீழ்காணும் செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— பொன்னப்பன்; துணைச் செயலாளர்:— வி. ஆறுமுகம்; பொருள் உறுப்பினர்:— ம. ப. சென்னியப்பன்; விளம்பர உறுப்பினர்:— எம். ஆர். வடிவேல் ஏனைய செயற்குழுவினர்:— அப்துல் ஜப்பார், நாச்சிமுத்து, உசேன், அங்கமுத்து, எம். ஏ. கோபால், வி. கே. முத்து, பழனியப்பன். தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச்செயலாளர் ஆறுமுகம் நன்றிகூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

கொங்கல்—நகரக் கிளை

கொங்கல், மார்ச். 25—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் தோழர் ம. சப்பையன் அவர்கள்தலைமையில் கூடியது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்— கொங்கல் நகரக் கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. எஸ். ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்:—எஸ். ரங்கசாமி; பொருள் உறுப்பினர்:—ம. சப்பையன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. முத்துசாமி, அ. சுப்பிரமணியம், க. வெங்கடாசலம், பழனியப்பன், க. விஸ்வநாதன்.

* * *

ஆம்பூர்—உட்கிளை

ஆம்பூர், மார்ச். 29—

26-3-50 அன்று காலை இவ்வூர் கணேசன் கடையில், திராவிடமுன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் சி. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, ஆம்பூர் விளையங்கார வீதியில் "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆம்பூர் கிளை" நிறுவப்பட்டு, கீழ்வரும் செயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ஆர். ரங்கநாதன்; துணைச்செயலாளர்.—க. அன்பரசு பொருள் உறுப்பினர்:-எம். துரை; விளம்பர உறுப்பினர்:—எம். குப்பன்; ஏனைய செயற்குழுவினர்:—என். கணேசன், கே. பொன்னுசாமி, சி. முனியப்பன், எம். கண்ணன், எம். பலராமன். கே.மாலிக், கே. கோபால், ராமலிங்கம், பி. எ. ரஹிமான், ஆர். கிருட்டினன், வி. செல்வராசு, வடிவேலு.

* * *

கூறைநாடு—சிற்றூர்க்கிளை

கூறைநாடு, மார்ச். 22—

15-3-50 அன்று மாலை இவ்வூர் லட்சுமி போட்டோ ஸ்டுடியோவில் "கூறைநாடு திராவிட முன்னேற்ற இளைஞர் கழகம்" நிறுவப்பட்டது கூட்டத்திற்குத்தோழர்சாமிநாதன் அவர்கள் தலைமை வகித்து, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பிறகு தோழர் ஆர். ஜோசப் அவர்கள் தி. மு. க. அவசியம்பற்றிப்பேசினார்கள். பின்னர் கீழ்க்கண்டவாறு செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— அ சாமிநாதன்; துணைச்செயலாளர்:—ஆர் ஜோசப்; பொருள் உறுப்பினர்:— செல்வராசு; விளம்பரஉறுப்பினர்: - என். கிட்டப்பா.ஏனைய செயற்குழுவினர்கள்:— ஜி. நடேசன், கே. எஸ். சௌந்தரராசன், எ. கோவிந்தராசன், வி. எ. அமிர்தலிங்கம் ஜி. வி. பாலகிருஷ்ணன், [illegible] சிதம்பரம், ஜே. சோமணி [illegible] சலுமான், துரைராஜ். [illegible] வர் நன்றியில கூட்டம் [illegible] முடிந்தது.

'வாழ்க்கை'யின் வெள்ளிவிழா!

சென்னை, ஏப். 3—

ஏ. வி. எம். 'வாழ்க்கை'ப் படத்தின் வெள்ளி விழா, நேற்றுமாலை 6 மணிக்கு சென்னை பாரகன் தியேட்டரில் வெகு அழகாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சென்னை கார்ப்பொரேஷன் மேயர் தோழர் செங்கன் தலைமை தாங்கினார். அவர்பேசும்போது படத்தைப் பாராட்டியும், ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்களையும் பாராட்டிப்பேசி, மெய்யப்பர் கட்டவிருக்கும் மருத்துவவிடுதிக்குத் தன்னால் ஆன உதவியைச் செய்வதாகவும் என்றும், குறிப்பிட்டார். அடுத்து தோழர் மா. போ. சிவஞானம் பேசினார். தோழர்கள் செங்கன், சிவஞானம், நேஷனல் பிக்சர்ஸ் ஏ. வி. எம். மெய்யப்ப செட்டியார், கதை ஆசிரியர் ப. நீலகண்டன் ஆகியோருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு நன்றி கூறுதலுடன் விழா இனிது முடிவுற்றது.

முட்டையுடன் ஒட்டிய வாள்!

ஆம்பூருக்கடுத்த ஒன்றரை மைல் தூரத்தில் சோலூர் கிராமத்தில் காதருனி என்னும் ஓர் குடியானவர் வீட்டில் ஒரு கோழி இருந்தது. அது அநேக முட்டைகள் இட்டன அது 29-3-50 புதன்கிழமை இரவு 7-30 மணிக்கு ஒரு முட்டை இட்டது. அதில் $1\frac{1}{2}$ அங்குலம் உள்ள ஒரு வாள் முளைத்திருந்தது. அந்த முட்டையை அநேக தோழர்களும் தோழியர்களும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்த வாள் ஒட்டி இருக்கிறதா அல்லது அதனுடன் முளைத்ததா என்று ஆஸ்பத்திரியில் கொண்டு பார்த்தால், அதனுடன் முளைத்ததுதான் என்று கூறப்படுகிறது.

ஊழல் பிரச்னையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது மந்திரிகளின் போக்கு. பிரகாசத்தின் மீதும் குற்றப் பத்திரிக்கை தீட்டலாம்; அவரையும் பிரதிவாதிக் கூண்டில் நிற்கவைக்கலாம், விசாரணை நடத்தலாம்; மற்ற மந்திரிகளுக்கு அளிப்பது போன்ற தண்டனையை அவருக்குப் அளிக்கலாம்; அப்படிச் செய்வதுதான் நீதிக்கும் நேர்மைக்கும் ஒத்தசெயலாகக் கருதப்படும்.

ஊழல்களை வெளிக் கொண்டு வந்து, மேலும் மேலும் நடைபெருமல் செய்வதற்கான வழி வகுப்பது தான் சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாக இருக்க வேண்டுமேயல்லாது ஒருவர்க் கொருவர் ஊழலை மறைத்துக்கொண்டு, காலந்தள்ளுவது அவர்களுக்கும் நல்லதல்ல; அவர்கள் நடத்தும் கட்சிக்கும் நல்லதல்ல எனவேதான், நாடாளும் மன்றத்தில் ஊழல் ஊற்றெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது,மக்களின் இன்றியமையாக் கடமையாகும் என்கிறோம்.

நேரு—லியாகத் பேச்சு

[illegible]

[illegible]

லண்டன், ஏப். 4—

புதுடில்லியில் இந்தியாவின் பிரதமமந்திரி பண்டிட் நேருவிற்கும், பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத்அலிகானுக்கும் நடைபெறும் பேச்சு குறித்த செய்திகளுக்கும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிரதான்யம் கொடுத்து பிரசுரிக்கின்றன.

இந்தப் பேச்சின் விளைவாக இந்திய பாகிஸ்தான் உறவு மோசமாகாமல் தடுக்கப்படும் என்று இங்கு திருப்தி தெரிவிக்கப்படுகின்றன.

இப்பேச்சு வார்த்தைகள் வங்க நிலைமையைப்பற்றி மட்டிலும் இருக்கலாம் என்று புதுடில்லி செய்திகள் சூசகமாக தெரிவித்த போதிலும், இந்தியாவின் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந்திய பாகிஸ்தான் உறவைப்பாதிக்கும் இதர பிரச்னைகளையும் மனம்விட்டு பேசி முடிவு செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இந்தியாவிலுள்ளபிரிட்டிஷாரில் சேர்மீது கல்கத்தா பத்திரிகைகள் எழுதியுள்ள குற்றச்சாட்டுகள் இங்கு ஓரளவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், பிரிட்டிஷார் மீது குறைகூற இடமேயில்லை என்றும் அவர்கள் இந்தியா, பாகிஸ்தான் விஷயத்தில் நல்லெண்ணத்துடனேயேதான் நடந்துகொள்கிறார்கள் என்று இங்கு கூறப்படுகிறது.

இந்தியா பாகிஸ்தான் இரண்டும் அந்நியோன்னியமாக இருக்கவேண்டும் என்பதில் பிரிட்டன் மிகவும் அக்கரைகாட்டுகிறது. அதுவும் அடுத்தமாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டிற்கு முன்னதாகவே இந்த சௌஜன்ய நிலைமை ஏற்படுவது மிகவும் கவலை அளிக்கும் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. — ரூனேசர்

'மாயக் குதிரை!'

மணிக்கு 10 மைல் செல்லுகிறது

ஐட்டாவா, ஏப். 3—

கானடாவில் உள்ள ஒரு சிறிய ஊரில், ஒருவன் ஒரு விசைக் குதிரை செய்திருக்கிறான். உயிருள்ள குதிரையைப் போலவே உயரம் நீளம் முதலியவையெல்லாம் செய்து, 6 குதிரை பவர் உள்ள பெட்ரோல் இன்ஜினை இதில் பொருத்தி வைத்திருக்கிறார். இக்குதிரை மணிக்கு 10 மைல் வேகத்தில் ஓடுகிறது.

இந்த விசைக் குதிரையை எங்கு வேண்டுமானாலும் விட்டு வைக்கலாம். குதிரை லாயம் வேண்டியதில்லை. ஊர் வாசிகள் இதற்கு தீனி போடாமலும் தண்ணீர் காட்டாமலும் இதன் மீது சவாரி செய்யலாம். குதிரையைப் பாதுகாப்பதிலுள்ள எந்தத்தொல்லையும்இதற்குக் கிடையாது.

வேலைக்காரச் சிறுமியை வெந்தக் கோலால் சுட்டதாக வழக்கு

லெமி என்ற எட்டு வயது வேலைக்காரச் சிறுமியை லெண்டி விஜயவீர என்ற ஒரு சோற்றுக் கடைக்காரர் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் உடம்பு முழுவது சுட்டு துன்பப்படுத்தியதாகத் தகவல் கிடைத்ததின் பேரில். சினன்வாடி போலிசை சார்ந்த சார்ஜன்ட் சளரக்கோன் மேற்படி நபரைக் கைது செய்தார். வைகறை 4-மணி [illegible]

[illegible] காரணமென்று சொல்லப்படுகிறது.

திரிகோணமலை நீதிபதி எதிரியை ரூபாய் 500 பிணையில் பேருமாறு சொல்லி விளக்கத்தை ஒத்திவைத்தார்.

ஆண்பனையில் பனம்பழம்

மன்னரில் அதிசய சம்பவம்

மன்னர், செவ்வாய் தோட்டக்காடுஎன்னுமிடத்திலுள்ள ஆண் பனை ஒன்றிலிருந்து மரமேறுபவனொருவனால் வெட்டப்பட்டு மன்னர் டவுனிலுள்ள கச்சேரிக்குக்கொண்டு வரப்பட்ட இளம்டனம் பழக்குலையொன்று நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.டனஞ்சோலையில் தொழிலாற்றிக்கொண்டிருந்த பிரஸ்காபமரமேறி ஆண்டனையில் இக்குலைதொங்கி கொண்டிருப்பதைக் கண்டு அதனை வெட்டினான்.

அதன் பூங்கொத்தில் இரு கிளைகளிருந்ததாயும், அவற்றிலொன்று நீளமாக இருந்ததாயும் விசாரணையின்போது கூறப்பட்டது. குட்டையான கிளையில் ஆண் பூக்களும் ஆனல் நீளமான கிளையில் பாக்குகளின் பருமனில் 50 காய்களும் இருந்தன,

சிறந்த புத்தகங்கள்

வால்காவிலிருந்து - - கங்கைவரை
விலை ரூ. 5—0—0
(ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய புத்தகம் என்று, 'திராவிடநாடு' கூறுகிறது)

மாபெரும் சதி
விலை ரூ. 1—4—0

தூக்குமேடைக்குறிப்பு
விலை ரூ. 1—0—0
(உணர்ச்சி மிகுந்த மரண சாசனம்)

நாஸ்திகமும் - - திராவிடக் கழகமும்
விலை ரூ. 0—4—0

ஆண்டன் செஉறாவ்
விலை ரூ. 3—8—0
(சிறுகதைச் சக்ரவர்த்தியின் வாழ்க்கை வரலாறு)

புரட்சி
விலை ரூ. 0—10—0

வேலைநிறுத்தம் ஏன்?
விலை ரூ. 0—12—0

தமிழ்ப் புத்தகாலயம்,
மயிலாப்பூர் :: சென்னை-4.

குற்றப் பரம்பரைக் குடிகள் சட்ட விசாரணை

யோசனை அனுப்பும் கடைசித் தினம்

குற்றப்பரம்பரைக்குடிகள் பற்றிய சட்டம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் உத்தர பிரதேசத்தில் சுற்றுப் பிர[illegible]

[illegible] விருப்புகளுக்கும் அவர்கள் விஜயம் செய்கிறார்கள். இதுவிஷயமாய் அவர்கள் ஒரு வினாப் பத்திரமும் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு விடை அனுப்பவேண்டிய தேதி 19 0 மார்ச் 31 என்று குறிப்பிடப்பட்டது. இந்த விசாரணையில் அக்கறையுள்ள எல்லாப் பொதுஜனப் பிரதிநிதிகளும், ஸ்தாபனங்களும் கமிட்டி குழுவினருக்குத் தங்கள் கருத்துக்களை அறிவிப்பதும், யோசனைகளைத் தெரிவிப்பதும் சாத்தியமாக இருக்கும்பொருட்டு, விடை அனுப்ப வேண்டிய கடைசித் தேதியை 1950 மார்ச் 31லிருந்து 1950 ஏப்ரல் 30உ வரைத் தள்ளி வைத்துக் கால அவகாசத்தை நீடிக்க இப்பொது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதில் அக்கறையுள்ள பொது மக்கள் இந்த வினாப்பத்திரப் பிரதியைக் காரியதரிசி, குற்றப் பரம்பரைக் குடிகள் சட்ட விசாரணைக் குழு, உள்நாட்டு மந்திரிசபை, புதுடில்லி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுமாறும், அவர்களது பதில்களை 1950 30உக்குள் கமிட்டி காரியதரிசிக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஏஜெண்டுகளுக்கு!

மார்ச்சு 31-ந் தேதியுடன் இவ்வாண்டு கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால், நிலுவையுள்ள பாக்கி பூராவும் இம்மாதம் 10ந்தேதிக்குள் அனுப்பித்தரவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர் : "மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1